தீயணைப்பு-மீட்புப்பணித்துறை, தருமபுரி மாவட்ட அலுவலரது செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் : திரு. இர.அப்பாஸ்., பி.இ., மாவட்ட அலுவலர்.
தருமபுரி மாவட்டம்.

செ.மு.ஆ.எண்: 455/2022.
ந.க.எண்: 824/அ1/2020. நாள்: ௨௮-12-2022

பொருள்: தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புப்பணி-தருமபுரி மாவட்டம்- தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-IV-ன் கீழ் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018.ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் திரு அ.பழனி என்பவருக்கு பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவம் துவங்குதல் ஆணை வழங்குதல்-தொடர்பாக.

பார்வை:
1) செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்:1339/PSD-G1/2019. நாள்:15-02-2019
2) தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புப்பணித்துறை, இயக்குநர் அவர்களது குறிப்பாணை ந.க.எண்:3713/ஆ1/2019. நாள்:27-02-2019.
3) திருப்பூர் மாவட்ட அலுவலரது செயல்முறை ஆணை மூ.மு.எண்:1402/ஆ1/2019. நாள்:05-03-2019.
4) மாநில கூர்நோக்கு ஆய்வுக்குழு தலைவரின் செயல்முறை ஆணை:6895/CV 3(2) 2019-4. நாள்:07-12-2022.

*****

<u>ஆணை:-</u>

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களது கடிதத்தின்படியும், பார்வை 2-ல் காணும் இயக்கக குறிப்பாணையின்படியும், 2015-2016, 2016-2017, 2017-2018.ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி-IV பதவிக்கான இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட திரு அ.பழனி (பதிவு எண்:040219179) என்பவரை இவரது கல்வித் தகுதி மற்றும் பணி அமர்வு தொடர்பான பிற சான்றுகள் சரிபார்க்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதன் அடிப்படையில் பார்வை 3-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, 05-03-2019 முதல் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டதன் அடிப்படையில் திரு அ.பழனி என்பவர் 05-03-2019 முதல் பணி நியமனம் செய்யப்பட்டு, மாற்றுதலில் தருமபுரி மாவட்ட அலுவலர் அலுவலகத்தில் 18-02-2020 முதல் இளநிலை உதவியாளாராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் செயலாளரது கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி, பார்வை 4-ல் காணும் மாநில கூர்நோக்கு குழுவின் தலைவர் அவர்களது செயல்முறை ஆணையில் இப்பணியாளரின் சாதி மெய்தன்மை (மலையாளி) குறித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதால், கீழ்க்குறிப்படப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இவர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாள்:05-03-2019 முதல் இவரது பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

**The Regularisation is subject to the out come of the WPs pending on the files of the Hon'ble High court of Madras / Madurai Bench of the Hon'ble High court of Madras relating to combined civil services Examination-IV for the year 2015-2016, 2016-2017 and 2017-2018 recruitment.**

மேற்படி பணி வரன்முறையினை தொடர்ந்து திரு அ.பழனி என்பவர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாள்:05-03-2019 முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவங்கியும் ஆணையிடப்படுகிறது.

மேற்படி திரு அ.பழனி என்பவர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 05-03-2019 முதல் மூன்றாண்டு கால தொடர்பணி காலத்தில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட வேண்டும்.

மேற்படி பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் இவரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது எனவும் சான்றிடலாகிறது.

**மாவட்ட அலுவலர்,**
தீயணைப்பு-மீட்புப்பணிகள்,
தருமபுரி மாவட்டம்.

பெறுநர்: திரு அ.பழனி,
இளநிலை உதவியாளர்.
மாவட்ட அலுவலர் அலுவலகம்.

நகல்: இயக்குநர், தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புப்பணிகள் துறை,
சென்னை-08.

நகல்: இணை இயக்குநர், தீயணைப்பு-மீட்புப்பணித்துறை,
மேற்கு மண்டலம், கோவை-18.

நகல்: ப.ஆ.கோப்பு.